முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 119/10

பி.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

பிராது சொத்து வேறு நான் கிரையம் வாங்கிய சொத்து வேறு என சொல்லியிருக்கிறேனா என்றால் சரி. பிராதில் உள்ள சொத்தை நான் கிரையம் வாங்கவில்லையா என்றால் சரி. பிராதில் உள்ள சொத்தை டவுண் சர்வேயில் சேர்த்து விட்டார்களா என்றால் ஆமாம். தாவா சொத்தின் டவுண் சர்வே எண். 2/9பி வார்டு எப் பிளாக் 3 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது வா.சா.ஆ.4. தாவா சொத்தின் பட்டா என்றால் சரிதான். பிராது சொத்து விபரத்தை படித்துஉள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். பிராது சொத்து நான்குமாலில் எனக்கு ஆட்சேபனை இல்லையா என்றால் இருக்கிறது. வாதி கிரையம் வாங்கிய பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த கிரையப்பத்திரத்தில் உள்ள நான்குமாலை தான் பிராது நான்குமாலில் போட்டுள்ளார் என்றால் சரி. வாதி தாக்கல் செய்துள்ள முன்பத்திரங்களை பார்த்து விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிராதை தான் பார்த்தேன் என சொல்லும் சாட்சி வக்கீல் மூலமாக பார்த்தேனா என்பதற்கு பார்த்தேன் என்கிறார். பிராதில் சொல்லியுள்ள சொத்து விபரம் தான் வாதி தாக்கல்க செய்த முன்பத்திரங்களில் உள்ளது என்றால் சரி. தாவா சொத்து எத்தனை வருடமாக விவசாயம் இல்லாமல் தரிசாக இருக்கிறது என்றால் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பில் இருந்தே தரிசாக தான் இருக்கிறது. நான் வாங்கிய கிரையத்திற்கு பைமாஸ் எண். 804, சர்வே எண்.227/9 ஒன்று என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.5. 1960ம் ஆண்டு ஒத்தி பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 1960ம் ஆண்டு பத்திரம் எங்கே என்றால் சாட்சியால் இனம் காணப்பட்டது பி.சா.ஆ.5. மேற்படி பி.சா.ஆ.5 ல் பைமாஸ் எண் 804க்கு சர்வே எண்227/9 என போட்டுள்ளது. பத்திரம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் கொண்டல்ராஜா நாடாருக்கு அப்துல் ரசாக் எழுதி கொடுத்தது. சொத்து அப்துல் ரசாக்குக்கு பாத்தியமா என்றால் ஆமாம். பைமாஸ் எண் 804க்கு மொத்த எத்தனை ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது என்றால் பைமாஸ் எண்.804க்குள் நிறைய சர்வே எண்கள் உண்டு. தாவா சொத்துக்கு தீர்வை வசூல் செய்யவில்லை என்றால் சரி. ஒரு குழி எவ்வளவு என்றால் 50 செண்ட். எதில் சொல்லியுள்ளது என்றால் பழைய பத்திரங்களில் சொல்லியுள்ளது. சாகுல் ஹமீது யார் என்றால் அப்துல் ரசாக்கின் மூத்த மகன். கிரையம் வாங்குவதற்கு முன்னர் தாவா சொத்திற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் (Oral ஆக) வாய்மொழியாக போட்டு பார்த்தேன் என்கிறார் சாட்சி. என்னுடைய பத்திரத்தில் வடக்கு மாலாக இருக்கும் தங்கமுத்து இந்த வழக்கின் வாதி என்றால் சரி. வடக்கு மாலில் தங்கமுத்து புஞ்சை என்று காட்டியுள்ள சொத்தை கிரையம் வாங்கி பிராதில் போட்டுள்ளார் என்று சொல்கிறேனா என்றால் தெரியாது. வாதி பிராதின் சொல்லியுள்ள சொத்துக்கு தெற்கே பெரியண்ணநாடார் புஞ்சை என்றால் இல்லை நடராஜ நாடார் இடம் உள்ளது. நடராஜ நாடார் பெரியண்ணநாடாருக்கு என்ன உறவு என்றால் தெரியாது. வாதி பிராதில் சொல்லியுள்ள சொத்துக்கு கிழக்கே படையேறிநாடார் சொத்து

என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய சொத்துக்கு பக்கத்தில் படையேறிநாடார் சொத்து உள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.1, 2, 3 பத்திரங்களில் பைமாஸ் எண். 804 சொல்லியுள்ளதா என்றால் சொல்லியுள்ளது. பி.சா.ஆ.3ல் பைமாஸ் எண்.804 சொல்லியுள்ளது என சாட்சியால் எடுத்து காட்டப்பட்டது. நான் சொல்வது போல் தாவா சொத்துக்குரிய பைமாஸ் எண். 804 இல்லை என்றால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எந்த பத்திரங்களிலும் பிராதில் உள்ள சொத்து இல்லை என்றால் சரி. பிராதில் உள்ள சொத்தை நான் கிரையம் வாங்காததால் பிராது சொத்தை பொறுத்து வாதி தீர்ப்பு வாங்கி கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லையா என்றால் இல்லை. தாவா சொத்தை 1ம் வாதி கிரையம் வாங்கி அதற்கு பின் அவரது மனைவி மற்றும் மகன் அனுபவித்து வருகிறார் என்றால் தரிசாகத்தான் இருக்கிறது. 0.3.0 குழி என்றால் 1 ஏக்கர் 50 செண்ட். தாவா பிராது சொத்துக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லாததால் வாதிகளுக்கு வீணாக இடைஞ்சல் செய்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் தாவா சொத்துக்கான பட்டாவை ஆட்சேபனை செய்து மேல்முறையீடு செய்தேனா என்றால் மனு தாசில்தாரிடம் கொடுத்தேன். அதற்குள் வழக்கு போட்டுவிட்டார். மேல்அதிகாரிகளிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. வருவாய் வட்டாட்சியரிடம் கொடுத்த மனு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.